1992 ஜனவரி 31] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

சென்னை தொழிலாளர் ஆணையர் ஆலையை மூட அனுமதி மறுத்து, 8—1—1992-ல் பிறப்பித்த உத்தரவை தள்ளி வைத்து, நிர்வாகத்தினர் ஆலையை மூட அனுமதி கோரி விண்ணப்பித்த மனுவின் மீது மறுபடியும் விசாரணை செய்து புதிதாக ஆணை பிறப்பிக்குமாறு தொழிலாளர் ஆணையருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அவ்வாணைக்கு இணங்க தொழிலாளர் தகராறு சட்டப்பிரிவு 25-ஓ-ன் கீழ் விசாரித்த தொழிலாளர் ஆணையர் ஆலையை மூட அனுமதி மறுத்து 22—11—1991-ல் புதிதாக ஆணை ஒன்றைப் பிறப்பித்தார்கள். அதே ஆணையில் ஆலையின் துணி பதனப்படுத்தும் பிரிவை நிர்வாகம் புவனகிரிக்கு மாற்றலாம் எனவும் ஆணையர் அனுமதி அளித்திருந்தார். தொழிலாளர் ஆணையர் பிறப்பித்த இந்த ஆணையை எதிர்த்து நிர்வாகமும் தொழிற்சங்கங்களும் மறு ஆய்வு மனுக்களை அரசுக்கு சமர்ப்பித்தன. இந்த மறு ஆய்வு மனுக்கள் மீது தொழிலாளர் துறைச் செயலாளர் இரு தரப்பார்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூற சந்தர்ப்பம் அளித்து விசாரணை நடத்தினார். இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் பிரதிநிதியை யும் இது சம்பந்தமாக தொழிலாளர் நல செயலாளர் விசாரணை செய்து முடித்துள்ளார். இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் 4—2—1992 அன்று நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-45

2. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி எ. எஸ். பொன்னம்மாள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த submission -ஐ நீங்கள் என்னிடம் முன்பே கேட்டிருக்க வேண்டும். என்ன Submission என்று எனக்குத் தெரியாத நிலையிலே. . .

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

THIRU S. PETER ALPHONSE : I wanted to draw your attention. That is all. I do not want any reply from any Ministers.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, நீங்கள் கேட்டிருந்தால் நான் அனுமதிக்கலாம் (குறுக்கீடு). எந்த விதியின்கீழ் இதை கிளப்ப முடியும்? சில முக்கியமான பிரச்சினைகள் பற்றி நான் கிளப்புவதற்கு சில நேரங்களில் அனுமதிக்கிறேன் (குறுக்கீடு) இது எப்படி Submission -ல் under which rule can you submit to me at this stage? வரும்? நீங்கள் இதிலே Submission எந்த விதியில் கேட்க முடியும்?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதற்குதான் வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Zero-hour- என்கிறதால்தான் இந்தமாதிரி சில முக்கியமான பிரச்சினைகளை கிளப்ப வேண்டுமென்று கேட்கிறார்கள். கேட்டவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் எதுவுமே இல்லாமல்.... (குறுக்கீடு) அதை நீங்கள் என்னிடத்தில் வந்து சொல்லியிருந்தால்தானே முடியும்?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் முக்கிய அலுவல் காரணமாகச் செல்வதால் நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

1. தமிழ்நாடு அரசின் 1961-62, 1962-63, 1964-65, 1965-66, 1967-68 முதல் 1971-72 வரையிலான ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில்

1992 ஜனவரி 31] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

(சிவில்) வேளாண்மைத் துறை தொடர்பான பொதுக் கணக்குக் குழுவின் தனது முந்தைய அறிக்கைகளிலும், நான்காவது அறிக்கை (எழாவது பேரவை)யிலும், இருபத்தைந்தாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யிலும் மற்றும் முப்பத்தொன்பதாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை)யிலும் தொடர்பட்ட பரிந்துரைகள் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய இருபத்தி நான்காவது அறிக்கையை அளிக்கின்றேன்.

2. 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கைகளில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

3. தமிழக அரசின் கணக்குகள் மீது இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80, 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தி நான்காவது அறிக்கை (எழாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் இருபத்தி ஆறாவது அறிக்கையை சபைக்கு அளிக்கின்றேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.